CMEV CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE
මැතිවරණ ප්‍රචණ්ඩත්වය නිරීක්ෂණ මධ්‍යස්ථානය
தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்
No 6/5, Layards Road, Colombo 05, **Tel:** +094-11 3010664
**Fax**: +094-11 2505228 **E-mail**: cmev@cpalanka.org **Web**: www.cmev.org

**உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்- 2018**

**ஊடக அறிக்கை - இல 01**

01 ஜனவரி 2018, நேரம் நண்பகல் 12.00 மணி, கொழும்பு- ஸ்ரீலங்கா

கடந்த சில வருடங்களாக பல்வேறு காரணங்களின் நிமித்தம் நாளுக்கு நாள் பிற்போடப்பட்ட உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை நடத்துவதற்கான தினத்தினை தேர்தல்கள் ஆணைக்குழு உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. அவ்வகையில் இந்நாட்டிலுள்ள வாக்காளர்கள் அனைவரையும் மன உளைச்சலுக்கு உட்படுத்தியிருந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள், 2018 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 10 ஆம் திகதி சனிக்கிழமை அன்று நடத்தப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக இடம்பெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் மூன்று கட்டங்களாக நடத்தப்பட்டது.

முதற் கட்டம் 2011 ஆம் ஆண்டு 03 ஆம் மாதம் 17 ஆம் திகதி இடம்பெற்றது.

இரண்டாம் கட்டம் 2011 ஆம் ஆண்டு 07 ஆம் மாதம் 23 ஆம் திகதி இடம்பெற்றது.

மூன்றாம் கட்டம் 2011 ஆம் ஆண்டு 08 ஆம் மாதம் 10 ஆம் திகதி இடம்பெற்றது.

இதற்கு முன்னர் இடம்பெற்ற தேர்தல்கள் அப்போது தேர்தல்கள் ஆணையாளராகப் பதவி வகித்த திரு. தயானந்த திசாநாயக்க அவர்களின் தலைமையின் கீழ் இடம்பெற்றது. தேர்தலுடைய முதலாவது கட்டம் நிறைவு பெற்றவுடன் தயானந்த திசாநாயக்க அவர்கள் ஓய்வு பெற்றுக் கொண்டமையினால் தேர்தலின் இரண்டாவது கட்டமானது தேர்தல்கள் ஆணையாளராகப் பதவியேற்ற திரு. மஹிந்த தேசபிரிய அவர்களின் தலைமையின் கீழேயே இடம்பெற்றது. இத்தேர்தலே, தேர்தல்கள் ஆணையாளரின் கீழ் இடம்பெற்ற இறுதி உள்ளூர் அதிகார சபைத் தேர்தலாகவும் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையின் கீழ் இடம்பெற்ற இறுதி உள்ளூர் அதிகார சபைத் தேர்தலாகவும் அமைந்தது.

முன்னைய அரசாங்கமானது விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை (PR) மற்றும் உறுப்பினர் முறை (FPTP) ஆகியவற்றினை இணைத்து ஒரு கலப்பு தேர்தல் முறையினைப் பயன்படுத்தி உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களை நடத்துவதற்கு தீர்மானித்திருந்த போதிலும்கூட, குறிப்பிட்ட தீர்மானம் மீளப்பெறப்பட்டதுடன், உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழேயே இடம்பெற்றது. இத்தேர்தல்களின் போதே இலங்கையிலுள்ள அனைத்து வாக்குச் சாவடிகளிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கான உத்தியோகபூர்வ அங்கீகாரமானது, தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (CMEV) மற்றும் சுதந்திரமானதும் நியாயமானதுமான தேர்தல்களுக்கான மக்கள் செயற்பாடு (PAFFRAL) ஆகியவற்றிற்கு வழங்கப்பட்டது.

மூன்று கட்டங்களாக நடைபெற்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களின் இறுதி முடிவின்படி ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியானது, 4,774,791 வாக்குகளைப் பெற்றுக்கொண்டதுடன் நாடு முழுவதிலுமுள்ள 322 உள்ளூர் அதிகார சபைகளில், 271 உள்ளூர் அதிகார சபைகளுக்குரிய ஆட்சி அதிகாரத்தினையும் பெற்றுக் கொண்டது.

கீழுள்ள அட்டவணையானது கடந்த உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்களில் அதிகாரம் பகிரப்பட்ட முறையினை எடுத்துக் காட்டுகின்றது. இவ் அட்டவணையானது ஒவ்வொரு அரசியற் கட்சியும் சுயேட்சை குழுவும் பெற்றுக் கொண்ட உள்ளூர் அதிகார சபைகளின் எண்ணிக்கையினைக் காட்டுகின்றது.

| கட்சி அல்லது சுயேட்சை குழுவின் பெயர் | மாநகர சபை | நகர சபை | பிரதேச சபை | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணி | 17 | 29 | 225 | 271 |
| இலங்கை தமிழரசு கட்சி | - | 5 | 25 | 30 |
| ஐக்கிய தேசிய கட்சி | 2 | 5 | 3 | 10 |
| ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் | 1 | - | 4 | 5 |
| தேசிய காங்கிரஸ் | 1 | - | 1 | 2 |
| தமிழர் விடுதலை கூட்டணி | - | - | 2 | 2 |
| மலையக மக்கள் முன்னனி | - | - | 1 | 1 |
| சுயேட்சை குழு | - | - | 1 | 1 |
| மொத்தம் | 21 | 39 | 262 | 322 |

உள்ளூர் அதிகார சபைகளுக்கென நியமிக்கப்பட்ட பதவிக்காலம் 4 வருடங்களே ஆகும். எனினும் இம்முறை உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலானது நான்கு வருடங்களைக் கடந்து நீண்ட கால இடைவெளி ஒன்றிற்கு பின்னரே நடத்தப்படுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. இத்தகைய நீண்ட கால தாமதத்திற்கு பல காரணங்கள் உண்டு. இவற்றுள் பிரதான காரணமாக அமைவது, புதிய தேர்தல் முறைக்காக உள்ளூர் அதிகார சபைகளுக்கான எல்லைகளை மீள் நிர்ணயம் செய்ய வேண்டியேற்பட்டமையாகும். அதேவேளை குறிப்பிட்ட சில அரசியல் விருப்பங்கள் மற்றும் அரசியல் கட்சிகளின் செயற்பாடுகளும் இத்தாமதத்திற்கான பிரதான காரணங்களாக அமைந்தன.

இத்தாமதம் குறித்து தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் தனது எதிர்ப்பினை அடிக்கடி வெளியிட்டிருந்தது. இவ்விடயம் தொடர்பில் அதிகளவான அவதானத்தினைப் பெற்றுக் கொண்டது தேர்தல்கள் ஆணைக்குழுவே ஆகும். அரசியலமைப்பிற்கான பத்தொன்பதாவது திருத்தத்தின் மூலமாக சுயாதீன ஆணைக்குழுக்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களுக்கமைய தேர்தல்களை உடனடியாக நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு காணப்பட்டது என பலர் கூறியிருந்தனர். மேலும் பெரும்பாலான பொதுமக்களும் தேர்தல்கள் ஆணைக்குழு தேர்தல்களை வேண்டுமென்றே பிற்போடுகின்றது என்ற தவறான ஒரு எண்ணப்பாட்டினைக் கொண்டிருந்தார்கள். பல அரசியற் கட்சிகள் தாமதத்திற்கான உண்மையான காரணத்தினை வாக்காளர்களுக்கு வெளிப்படுத்தாது, பொது மக்கள் கொண்டிருந்த தவறான எண்ணப்பாட்டினை உறுதிப்படுத்துகின்ற வகையில் நடந்து கொண்டமை குறித்து நாம் கவலை அடைகின்றோம்.

தாமதத்திற்கான உண்மைக் காரணம் எந்தவொரு அரசியற் கட்சியினாலும் அல்லது சுயேட்சை குழுவினாலும் வாக்காளர்களுக்கு வெளிப்படுத்தப்படவில்லை. அவ் உண்மைக் காரணம் யாதெனில், தேர்தல்களினை நடத்துவதற்கான முன் தேவைப்பாடு ஒன்றினை பூர்த்தி செய்வதற்கு ஏற்பட்ட தாமதமாகும். அவ்வாறாயின் அனைத்து வட்டாரங்களுடையதும் உறுப்பினர்களின் எண்ணிக்கையினை அறிவித்து ஒரு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட வேண்டியதே இம்முன் தேவைப்பாடாகும். இதற்கான காரணமாக அமைந்தது இப்புதிய தேர்தல் முறையின் கீழ் உள்ளூர் அதிகார சபைகளுக்கான உறுப்பினர் எண்ணிக்கை மாற்றமடைந்துள்ளமை ஆகும்.

இவ் அறிவித்தலினை வெளியிட வேண்டிய பொறுப்பு மாகாண சபைகள் மற்றும் உள்ளூர் அதிகார சபை அமைச்சினைச் சாரும். அமைச்சினால் வெளியிடப்படுகின்ற இத்தகைய அறிவித்தலுக்கு பாராளுமன்றம் அனுமதியளிக்காத வரையில் தேர்தல்களை நடத்துவதற்கான தினத்தினை நிர்ணயிக்கும் அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு இருக்காது.

இவ்வர்த்தமானி அறிவித்தலினை வெளியிடுவதற்கு குறிப்பிட்ட அமைச்சு எடுத்துக்கொள்ளளப்பட்ட காலப்பகுதியானது ஒரு அசாதாரணமான தாமதமாக அமைந்தது என்பதனை இத்தேர்தல்கள் தொடர்பில் நுணுக்கமான அவதானிப்பினை மேற்கொண்டு வந்த எந்தவொரு நபராலும் உறுதியாக கூறமுடியும்.

ஆகவே தேர்தல்களை நடத்துவதற்கான தினத்தினை நிர்ணயிக்கும் முழுமையான அதிகாரத்தினை தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு அளிக்க கோரி அரசாங்கத்தினை வலியுறுத்த வேண்டியது ஒவ்வொரு பிரஜையினதும் சிவில் சமூக அமைப்புக்களினதும் பொறுப்பாகும். குறிப்பாக தேர்தல்களை நியாயமான காலப்பகுதிக்குள் திட்டமிட்ட விதத்தில் நடத்துவதற்கான அதிகாரம் தேர்தல்கள் ஆணைக்குழுவிற்கு வழங்கப்படுதல் வேண்டும்.

இத்தகைய ஒரு பின்னணியிலே நடைபெறப்போகின்ற உள்ளூர் அதிகார சபைத் தேர்தல்கள் மிகவும் முக்கியமானதாகும். ஒரு புறம் இத்தேர்தல்கள் எதிர்காலத்தின் தேர்தல் செயன்முறை தொடர்பான வழிகாட்டியாக அமைகின்ற அதேவேளை, தேர்தல்கள் ஆணைக்குழுவின் வினைத்திறனாந்தன்மையினை உறுதிப்படுத்தக்கூடிய முதலாவது அனுபவமாகவும் இது அமைகின்றது. மறு புறம் இத்தேர்தல்களானவை கலப்பு உறுப்பினர் விகிதாசாரப் பிரதிநிதித்துவ தேர்தல் முறையினை பரிசீலித்துப் பார்க்கும் முதற் சந்தர்ப்பமாக அமைகின்றது.

13,000 வாக்களிப்பு நிலையங்களையும், 341 உள்ளூர் அதிகார சபைகளைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காக போட்டியிடுகின்ற 56000 வேட்பாளர்களையும் கொண்டு நடாத்தப்படுகின்ற இத்தேர்தலுக்கான தேர்தல்கள் ஆணைக்குழுவின் மொத்த செலவு சுமார் 3500 மில்லியன் ஆகும்.

2012 ஆம் ஆண்டு 22 ஆம் இலக்க உள்ளூர் அதிகார சபை (திருத்தச்) சட்டத்தின் மூலமாக இந்நாட்டிற்கு அறிமுகப்படுத்தப்பட்ட புதிய தேர்தல் முறையானது ஒரு திருப்பு முனையாக அமைந்து, எதிர்காலத்தில் நடைபெற இருக்கின்ற தேர்தல்களின் தன்மையினை முழுமையாக வெளிப்படுத்துவதாக அமையும் என்ற முடிவிற்கு வருதல் தற்போது சாத்தியமானதல்ல. இப்புதிய முறையானது இந்நாட்டிலுள்ள பிரஜைகளுக்கு ஒரு புதிய பரிமாணத்தை ஏற்படுத்தியுள்ளது. இதற்கான காரணம் இம்முறையின் கீழ் பிரஜைகளுக்கு நெருக்கமான ஒருவரை பிரதிநிதியொருவராகக் கொண்ட அரசியலின் மிகச் சிறிய அலகாக வட்டாரம் காணப்படுகின்றமையே ஆகும். இதற்கிணங்க 341 உள்ளூர் அதிகார சபைகளினை பிரதிநிதித்துவப்படுத்தி குறைந்தது 8356 மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்படுவதற்கு நிச்சயிக்கப்பட்டுள்ளது. இவ் அனைத்து உறுப்பினர்களும் விகித அடிப்படையிலேயே தெரிவு செய்யப்படுவார்கள்.

இம்முறை தெரிவு செய்யப்படவிருக்கும் உறுப்பினர்களின் எண்ணிக்கையானது கடந்த முறை உள்ளூர் அதிகார சபைகளுக்காகத் தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் எண்ணிக்கையின்

இரு மடங்கினை விட சற்று அதிகமாகும். இம்முடிவானது உள்ளூர் அதிகார சபை உறுப்பினர்களின் செயற்பாட்டு வினைத்திறனை விளைவாகக் கோருகின்றதான, நாட்டை அபிவிருத்தி செய்வதற்கான ஒரு ஆக்கவளம் கொண்ட முதலீடாகவே அடையாளம் காணப்படுகின்றது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையமானது தன்னுடைய கண்காணிப்பு நடவடிக்கைகளினை மேற்கொள்வதற்கு ஆரம்பித்துள்ளது. இக் கண்காணிப்புச் செயன்முறையானது இரண்டு வகையான அணுகுமுறைகளைக் கொண்டுள்ளது. முதலாவதாக 25 மாவட்டங்களையும் கண்காணிக்கக்கூடிய வகையில் மாவட்ட மற்றும் கள கண்காணிப்பாளர்கள் நீண்ட கால கண்காணிப்பாளர்களாக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். அத்துடன் தேர்தல் தினத்தன்று ஒவ்வொரு வாக்களிப்பு நிலையத்திலும் நிலையான கண்காணிப்பார்கள் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்கென ஈடுபடுத்தப்படவுள்ளார்கள். இவ்விரண்டு செயற்பாடுகளுக்கும் மேலதிகமாக தேர்தல் தினத்தன்று நாடு முழுவதிலும் மோட்டார் வாகனங்களூடாக மொபைல் கண்காணிப்பும் இடம்பெறும்.

இரண்டாவது அணுகுமுறையாக அமைவது யாதெனில் மாற்றுத்திறனாளிகளுடைய வாக்குப் பிரயோகத்தினை சாத்தியப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளினை மேற்கொள்கின்ற அதேவேளை தேர்தல் களத்திலே பெண்களுக்கு எதிராக இடம்பெறுகின்ற வன்முறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதலே ஆகும். இதற்கு மேலதிகமாக இம்முறை தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் பிரதான செயற்பாடொன்றாக அமைவது தேர்தல் பிரச்சாரங்களுக்காக செலவிடப்படுகின்ற மட்டுப்பாடற்ற செலவுகள் மற்றும் தேர்தல் பிரச்சாரங்களில் பொலித்தின் பாவனை ஆகிய விடயங்கள் தொடர்பில் கண்காணித்தலும் அது தொடர்பான தகவல்களையும் தரவுகளையும் திரட்டுதலும் ஆகும். மேலும் தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையத்தின் கண்காணிப்பு செயற்பாடுகள் தொடர்பான தகவல்கள் மற்றும் அறிக்கைகளை பிரதான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் மூலமாகவும், சமூக ஊடகங்களின் மூலமாகவும் அனைத்து வாக்காளர்களுக்கும் தொடர்ச்சியாக அறிவிப்பதற்கும் உத்தேசித்துள்ளோம்.